1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (“கம்பனி”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கை தகவல்களை உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள

வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெறவேண்டியவைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	கம்பனியின் கடன் கொள்கையின் பிரகாரம் அரசாங்க திணைக்களங்கள், பெருநிறுவன வாடிக்கையாளர்கள் மற்றும் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு அதிகபட்ச கடன் காலமாக முறையே 60 நாட்கள், 30 நாட்கள் மற்றும் 15 நாட்கள் அனுமதிக்கப்படுவதுடன் அதிகபட்ச கடன் நீடிப்பு 10 நாட்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வாடிக்கையாளர் வகுதியிலுள்ள நிலுவை கடன்பட்டோர் மீதியினை பகுப்பாய்வு செய்யும் போது அனுமதிக்கப்பட்ட கம்பனியின் கடன் காலத்தினை விட சில நிலுவைகள் விஞ்சியிருப்பது அவதானிக்கப்பட்டது. ஆகவே, நிர்ணயிக்கப்பட்ட கடன் காலப்பகுதிக்குள் நிலுவைக் கடன்பட்டோர் மீதியினை	2024.12.31 இல் உள்ளவாறு பெறவேண்டிய மீதிகளில் நாங்கள் ரூபா 85,342,085.89 அறவிட்டிருந்தோம். தற்போதுள்ள மீதி ரூபா 29,448,670.22 ஆகும். தற்போது நீடிப்பை குறைப்பதற்கு ஐயக் கடன்கள் பெருமளவு குறைக்கப்பட்டிருந்தது. பழைய ஐயக் கடன்கள் ஏற்கனவே நீதி மன்ற	கம்பனியின் கடன் கொள்கையின் பிரகாரம் கடன் காலப் பகுதிக்குள் அறிவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு சகல சாத்தியமான முயற்சிகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

கம்பனியினால் அறவிடமுடியவில்லை என அவதானிக்கப்பட்டது. மொத்த நிலுவைக் கடன்பட்டோர் மீதியின் காலப் பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடரப் பட்டமையால் அத்தகைய நடவடிக்கைகளுடன் பின்பற்றப்படுகின்றன. சில கடன்பட்டோர் நியாயச் சபைக்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளதுடன் சில கடன்பட்டோர் இன்னமும் உரிய கடன்பட்டோருக்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது

வாடிக்கையாளர் வகுதி	**2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவைகள் (ரூபா. 000')**				**மொத்த நிலுவைகளின் %**
	0-180 நாட்கள்	**181-360 நாட்கள்**	**360 இற்கு அதிகமான நாட்கள்**	**மொத்தம்**	
அரசாங்கம்	32,409.60	3,361.80	7,512.90	43,284.30	37.70
பெரு நிறுவனம்	46,062.70	3,999.20	21,444.60	71,506.50	62.30
மொத்தம்	**78,472.30**	**7,361.00**	**28,957.50**	**114,790.80**	**100.00**

(ii) ரூபா. 114,790,756 ஆன மொத்த நிலுவையானக இருக்கின்ற கடன்பட்டோர் மீதியில், ரூபா. 78,472,363 அல்லது 68.4 சதவீதமானவை 180 நாட்கள் வரை நிலுவையாக உள்ளதுடன் ரூபா. 28,957,410 அல்லது 25.2 சதவீதமானவை 360 நாட்களுக்கு மேலாக நிலுவையாக உள்ளமை கம்பனியின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பாதகமாக பாதிக்கலாம்.

(iii) ரூபா. 114,790,756 மொத்த நிலுவையில், ரூபா. 71,506,478 அல்லது 62.3 சதவீதமானவை பெருநிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய வாடிக்கையாளர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. கம்பனியானது பெருநிறுவன வாடிக்கையாளர்களுக்கு 30 நாட்கள் கடன் காலப்பகுதியினை அனுமதித்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பெற வேண்டியவைகளில் ரூபா. 25,443,735 அல்லது 35.6 சதவீதமானவை 180 நாட்களுக்கு மேல் நிலுவையாக உள்ளது.

(iv) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய பெறவேண்டிய நீண்டகால நிலுவை ரூபா 7,139,591 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,033,000 நிலுவையில் 01 வருட காலத்திற்கும் மேலாக நிலுவையாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	தொகை (ரூபா)
முற்பண கொடுப்பனவு	935,000
மீளளிக்கவெண்டிய வைப்புகள்	2,115,000
ADM தொங்கல்	(17,000)
மொத்தம்	**3,033,000**

முற்பணக் கொடுப்பனவு
2025 மே வரை நாங்கள் கணக்கில் காகிதாதி, விற்பனை ஊக்குவிப்பு விடயங்கள் மற்றும் முற்பணக் கொடுப்பனவு கணக்கீடு செய்யப்பட்டது. 2025 மே மாதத்தின் பின்னர் முற்பண தொகையில் கொடுப்பனவு பிரிக்கப்பட்டது. ரூபா 935,000 குறிப்பிடுகின்ற தொகை காகிதாதி மற்றும் 2024.12.31 இல் உள்ளவாறு கையிலுள்ள விற்பனை விடயங்களின் விற்பனை ஊக்குவிப்புகளாக உள்ளது. 2025 யூலை 31 இல் உள்ளவாறு அதற்காக மிகுதியாக இருக்கின்ற மீதி ரூபா 751,552/- விசேட வேண்டுகையில் மாத்திரம் வழங்கப்பட்டன.

மீளளிக்கவேண்டிய வைப்புகள்
2025 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு மிகுதியாக இருக்கின்ற மீதி ரூபா 180,000 ஆக உள்ளது. ரூபா 2,115,000 தொகையில் இரத்தினபுரி கிளை வளவிற்கு வழங்கப்பட்ட பெருமளவு பணமாக உள்ளது.

ADM தொங்கல்
தற்போது வரை ஏதாவது விமானங்களில் எந்தவொரு வேண்டுகையும் பெறப்பட்டிருக்கவில்லை. இந்த தொகை 2025 ஆம் ஆண்டு இறுதியில் விமான ரிக்கற் கணக்கின் கொள்வனவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

1.5.2 செலுத்த வெண்டியவைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் ஏனைய செலுத்த வேண்டிய மொத்த நீண்டகால நிலுவை ரூபா 28,611,581 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 13,954,000 ஆனது 01 வருட காலத்திற்கும் மேலாக	**வங்கியால் இனங் காணப்படாத கடன்** COVID 19 இன் பின்னர் அதிகமாக பயணிகள்கம்பனி வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டு நேரடியாக பயன்படுத்தகின்றன. பயணிகள் அல்லது விற்பனை உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்தும்	நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற மீதிகளை தெளிவாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நிலுவையாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	தொகை (ரூபா)
வங்கியால் இனங் காணப்படாத கடன்	1,564,000
மீளளிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத விமான ரிக்கற்	9,694,000
பெறப்பட்ட முற்பணம்	2,696,000
மொத்தம்	**13,954,000**

வரை கொடுப்பனவை உறுதிப்படுத்துவதுடன் உரிய கொடுக்கல் வாங்கல்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்காத கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. பயணிகள் உறுதிப்படுத்தும் வரை காலம் இடைவெளியாக உள்ளது. அவர்கள் ஆலோசனை வழங்கிய போதும் சில சந்தர்ப்பங்களில் பிரச்சனைகள் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. 5 ஆண்டுகளின் பின்னர் சபை அனுமதியுடன் மீதிகள் கம்பனி வருமான கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது. .

மீளளிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத விமான ரிக்கற்

பெறப்பட்ட இந்த தொகை பயணிகள் அல்லது உத்தியோகத்தரிடமிருந்து தற்போது வரை வேண்டுகை செய்யப்படவில்லை.

5 ஆண்டுகளின் பின்னர் சபை அனுமதியுடன் மீதிகள் கம்பனி வருமான கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது..

பெறப்பட்ட முற்பணம்

அந்த தொகை எதிர்கால கொடுக்கல வாங்கல்களிற்காக வாடிக்கையாளரால் செலுத்தப்பட்டன. பெறப்பட்ட இந்த தொகை பயணிகள் அல்லது உத்தியோகத்தரிடமிருந்து தற்போது வரை வேண்டுகை செய்யப்படவில்லை.

5 ஆண்டுகளின் பின்னர் சபை அனுமதியுடன் மீதிகள் கம்பனி வருமான கணக்கிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது.

(ii) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 31,374,000 ஆக இருந்ததுடன் 06 மாதங்களிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற ரூபா 1,493,000 ஆன செலுத்த வேண்டிய மீதிகளை உள்ளடக்குகின்றது. கம்பனியின் மொத்த வியாபார செலுத்த வேண்டிய மீதிகளின் காலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

தற்போது வரை கொடுப்பனவை செய்வதற்கு விநியோகத்தர் களிடமிருந்து எவ்வித விலைப் பட்டியல்களும் பெறப்பட்டிருக்கவில்லை. 5 ஆண்டுகளின் பின்னர் முகவரிகள் கிடைத்தமையால் அனுப்பிய மூன்று கடிதங்கள் பதிலளித்திருக்காததுடன் மீதிகள் சபை அனுமதியுடன் வருமானத்திற்கு மாற்றப்பட வேண்டியிருந்தது.

தாமதமில்லாமல் நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற மீதிகளை தெளிவாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது

நாட்களின் எண்ணிக்கை	**தொகை (ரூபா.)**
0-90	30,111,000
91-180	(230,000)
181-270	131,000
271-360	91,000
> 360	1,271,000
மொத்தம்	**31,374,000**

1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கொள்கை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச்சட்டத்தின் 17 (1) (அ) – (எ) ஆம் பிரிவின் கீழ் துணைக் கம்பனியின் முக்கிய வியாபார நடவடிக்கைகள் வராமை காரணமாக இலங்கை மத்திய வங்கியானது 2017 நவம்பர் 20 ஆம் திகதிய அவர்களின் கடிதத்தின் ஊடாக அடுத்து 03 வருடங்களுக்குள் பீஓசி டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டிலிலுள்ள பீஓசி தொகுதியின் உரிமையினை அகற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியானது இலங்கை வங்கிக்கு அறிவுறுத்தியுள்ளது. 2017 திசெம்பர் 28 இல் இலங்கை வங்கி பணிப்பாளர் சபையால் துணைக் கம்பனியினை அகற்றுவதற்கான தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. 2023 யூலை 24 இல் கம்பனியினால் முதலீட்டினை திரும்பப்பெறுவது தொடர்பான தீர்மானமொன்று நிறை வேற்றப்பட்டது. வருங்கால முதலீட்டாளர்களிடமிருந்து விருப்பத்தின் வெளிப்படுத்தலை கோரும் வகையில் 2024 மே 19 மற்றும் 20 ஆம் திகதியில் 05 பத்திரிகைகளில் விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டது முன்மொழிவின் வேண்டுதலின் (RFP) முடிவில் வருங்கால முதலீட்டாளர் ஒருவர் மாத்திரமே விலை மனுவொன்றை சமர்ப்பித்திருந்தார். எவ்வாறாயினும், தகவல்களின் குறைபாடு மற்றும் RFP குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யாமை காரணமாக பரிமாற்ற ஆலோசகர் கூறப்பட்ட RFP இனை நிராகரிப்பதற்கு பரிந்துரைத்துள்ளார். 2025 ஆகஸ்ட் 27	பெறப்பட்ட கேள்வி முன்மொழிவிறகாக வேண்டுகையின் தேவைப்பாட்டினை நிறைவேற்றியிருக்காமயால் நடைமுறை தாமதப்பட்டிருந்தது.டன் டிரான்ஸ் நடவடிக்கை ஆலோசகரின் பரிந்துரைகளில் நிராகரிக்கப்பட்டிரந்தது. இலங்கை வங்கி முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதுடன் மத்திய வங்கியின் நெறிப்படுத்தல்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு சகல வழிகளையும் மதிப்பாய்வு செய்யப்படும். அதேநேரம் நிலவுகின்ற அரசாங்க கொள்கையுடன் சீரமைக்கின்றது. வங்கியானது வங்கியியல் அதிகாரச் சட்டத்தின் கீழ் வேலை கட்டமைப்பு மற்றும் குறித்த கால எல்லைகள் செயற்படுத்தவதற்கு பங்களிப்பு செய்கின்றதுடன் பங்கு விற்பனை நடைமுறையை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு தொடரப்படும்.	பங்கு விற்பனைச் செயற்பாட்டை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைத்துள்ள அதேநேரம் மத்திய வங்கியின் நெறிப்படுத்தல்கள் மற்றும் வங்கியியல் அதிகாரச் சட்டத்துடன் இணங்கியொழுக வேண்டும்.

ஆன கணக்காய்வு திகதியிலுள்ளவாறு கம்பனியின் அகற்றல் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 71.1 மில்லியன் தொகை இலாபமாக காணப்படுவதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 91.8 மில்லியன் தொகையாக காணப்பட்டது. ஆகவே நிதி விளைவுகள் ரூபா 20.7 மில்லியன் தொகையினால் வீழ்ச்சியடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது வருமான அதிகரிப்பு 20.4 சதவீதம் வரை அதிகரித்திருந்த போதிலும், விற்பனை செலவினம் மற்றும் விநியோகச் செலவினம் முறையே 62.6 சதவீதம் மற்றும் 33.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே 5.8 சதவீதம் மற்றும் 29.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தமையே வீழ்ச்சிகளுக்கான காரணங்களாகும்.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

விபரம்	முரண் தொகை அதிகரிப்பு/ வீழ்ச்சி (ரூபா 000’)	முரண் (%)	முரணிற்கான காரணம்
வருமானம்	51,713	20.4	போட்டி மற்றும் செலவினங்களில் பொது அனுமதிச்சீட்டு வருமானம் ரூபா 6.3 மில்லியனால் வீழ்ச்சியடைந்த போதிலும் தம்படிவ சுற்றுலா வருமானம் மற்றும் வெளியூர் சுற்றுலா மற்றும் வெயியூர் தங்குமிடம் என்பன மீளாய்வாண்டின் பொது முறையே ரூபா 20.5 மில்லியன் மற்றும் ரூபா 37.4 மில்லியனால் அதிகரித்திருந்தது.
ஏனைய வருமானம்	(2,576)	(5.8)	விசா சேவைகள் வருமான அதிகரித்திருந்த போதிலும் கடன் அட்டை கொடுப்பனவுகள் கிடைக்கின்ற பயணக் காப்புறுதி மற்றும் உயர்ந்த ஊக்குவிப்பு இலக்குகள் காரணமாக பிரயாண காப்புறுதி விற்பனைகள் மற்றும் விமான சேவை ஊக்குவிப்பு என்பன வீழ்ச்சியடைந்திருந்தது.
தேறிய நிதி வருமானம்	(10,706)	(29.5)	இது வங்கி வைப்புக்களின் மீது வட்டி மற்றும் நாணயமாற்று இலாபம் என்பவற்றில் குறைவு ஆகியவையே இதன் பிரதான காரணமாகும்.
விநியோக செலவினங்கள்	2,997	33.7	விற்பனைகள் மேம்படுத்தல் செலவினம் ரூபா 0.24 மில்லியனால் அதிகரித்ததுடன் விற்பனைக்

செலவினம் ரூபா 0.4 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதேபோல ரூபா 2.9 மில்லியன் ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டில் பூச்சியமாக இருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டு காலப் பகுதிக்கான கம்பனியின் சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன

விகிதம்	**ஆண்டு**				
	2024	**2023**	**2022**	**2021**	**2020**
திரவத்தன்மை விகிதங்கள்					
நடைமுறை விகிதம்	4.5	3.0	3.0	2.5	4.5
மொத்தச் சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச் சொத்துக்கள்	0.74	0.66	0.62	0.54	0.61
செயற்பாட்டு விகிதங்கள்					
கடன்பட்டோர் புரள்வு விகிதம்	28	22	19	7	4
கடன்பட்டோர் புரள்வுக் காலம் (நாட்கள்)	13	16	19	52	84
இலாபத்தன்மை விகிதங்கள்					
தேறிய இலாப விகிதம் (%)	2.25	2.56	1.85	(5.96)	(18.8)
செயல்திறன் விகிதங்கள்					
உரிமை மீதான வருவாய் (ROE) (%)	32.38	42.89	25.53	(24.90)	(31.13)
மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் (ROA) (%)	23.48	27.94	15.18	(13.68)	(19.99)

(i) மீளாய்வாண்டின் போது திரவத்தன்மை விகிதம் அதிகரித்திருந்தது.

(ii) கடன்பட்டோர் புரள்வு விகிதம் மற்றும் கடன்பட்டோர் புரள்வுக் காலம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முன்னேற்றமடைந்திருந்தது.

(iii) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இலாபத்தன்மை விகிதங்கள் வீழ்ச்சியடைந்திருந்தது.

(iv) சுற்றுலாக் கைத்தொழில் படிப்படியாக முன்னேற்றமடைந்த போதிலும் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது உரிமை மீதான வருவாய் (ROE) மற்றும் மொத்த சொத்துக்கள் மீதான வருவாய் (ROA) வீழ்ச்சியடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(i)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர் சுழற்சி வீதம் 19 சதவீதத்தை பிரிதிநிதித்துவபடுத்தும் 2024 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எவ்விதமான புதுப்பிக்கப்பட்ட எட்டு (8) ஊழியர்கள் திரும்பியிருந்தனர். இது முன்னைய காலப் பகுதிக்கான உத்தியோகத்தர் சுழற்சி மற்றும் நேரொத்த உத்தியோகத்தர் தக்க வைத்திருக்கும் வீதம் வீழ்ச்சி என்பன ஒப்பிடுகையில் அதிகரிப்பை குறிக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளிற்கு மேலான போக்கு கீழே தரப்படுகின்றன.	02/Sp/2024 ஆம் இலக்க உங்களுடைய சபைத்தாளை அறிக்கையிடப்பட்டவாறு 2024 ஆண்டின் போது அனுபவப்பட்ட உத்தியோகத்தர் சுழற்சி முக்கியமற்ற பங்கு விற்பனையை செயற்படுத்துவதற்கு ஆரம்பத்தில் பங்களித்துள்ளதுடன் எங்களுடைய அனுபவமுள்ள சிரேஸ்ட உத்தியோகத்தர் மற்றும் முகாமைத்துவ குழு அணுகுகின்ற பிரயாண வியாபார செயற்பாட்டில் போட்டியாளர் மற்றும் முதலீட்டாளர்கள் என்போரால் மேலும் முதலீடு செய்யப்பட்டது. அந்த வெளித்தரப்பினர் வழங்கப்பட்ட நிலைபேறான உயர்ந்த சம்பளங்கள், நலன்கள் மற்றும் ஊக்குவிப்புகள் பல பிரதான ஊழியர்களின் வெளி யேறுகையை விளைவித்தது. அத்தகைய சுழற்சியால் சாத்தியமான ஆபத்து முறைகளை கருத்திற் கொள்வதால் முகாமைத்துவம் ஏற்கனவே விரிவாக சம்பள கட்டமைப்பு திட்டத்தை செயற்படுத்தியது. இந்த முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளதற்கே ஆகும். ஊழியர் திருப்தி மற்றும் ஈடுபாட்டு மேம்பாடு பிடித்துவைத்தல் வீதங்கள் மற்றும் எங்களுடைய ஊழிய திட்டம் நடைமுறையிலுள்ள தொழில் நியமங்களுடன் சீரமைத்தல். இந்த நடவடிக்கைகள் எதிர்கால வருமான ஆபத்துக்களை குறைத்து எதிர்காலத்தில் ஊழியர்களை தக்கவைத்துக் கொள்வதற்கு வலுப்படுத்தல் என்று நாங்கள் நம்புகின்றோம்.	கம்பனியின் செயற்பாடுகள் சுமூகமாக செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உத்தியோகத்தர் சுழற்சியை குறைப்பதற்கு பரிந்துரைத்துள்ளது.

ஆண்டு	உத்தியோகத்தர் தக்க வைத்திருக்கும் வீதம் %	உத்தியோகத்தர் சுழற்சி வீதம் %
2023	84.6	9.7
2024	76.7	19.0

(ii) கம்பனியிலிருந்து வெளியேறிய மேலே குறிப்பிடப்பட்ட 8 ஊழியர்களில் 6 பேர் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அனுபவத்தைக் கொண்டிருந்தனர் இதன் விளைவால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுவபம் வாய்ந்த ஊழியர்களின் சுழற்சியில் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.